**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை – 2016**

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் (''சபை'') 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1. இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கம் (எல்கேஎஸ்)**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) எல்கேஎஸ் 08 – கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தவறுகளிலுள்ள மாற்றங்கள்:** ரூபா 391,105,000 கிரயத்திலான முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களின் பாவணைக் காலத்தைக் மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் அந்த வாகங்களை சபையால் தொடர்ச்சியாக பயன்படுத்தப்படுகின்றன. மேலும், சபையானது அவற்றின் மதிப்பீட்டுத் தவறினை திருத்துவதற்கும் தவறியிருந்தது.

**(ஆ) எல்கேஎஸ் 12 – வருமான வரிகள்:**
மீளாய்வாண்டின் போதான நிதிக்கூற்றுக்களில் பிற்போட்ட வரி மதிப்பீடு மற்றும் பொறுப்புக்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்குப்பதிலாக, சகல தற்காலிக வரி வித்தியாசங்கள் மற்றும் தற்காலிக வரிவிலக்கு வித்தியாசம் என்பவற்றினை இனங்காணாமல் நிதிக் கூற்றுக்களில் பிற்போட்ட வரி கணப்பீடு தொடர்பான வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டிருந்தது.

**(இ) எல்கேஎஸ் 19- ஊழியர் நலன்கள்**

நியமத்தின் 58 ஆம் பிரிவின் வேண்டுகையின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ஓய்வூதிய நலன் உதவிக்கான (பணிக்கொடை ஏற்பாடு) ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக, மீளாய்வாண்டின் போது பணிக்கொடையாக செலுத்தப்பட்ட ரூபா 394.69 மில்லியனிற்கு சமமான தொகை மீளாய்வாண்டிற்கான ஏற்பாடாக இனங்காணப்பட்டிருந்தது. எனவே, மீளாய்வாண்டிற்கான இலாபம் மற்றும் பணிக்கொடைக்கான ஏற்பாடு ரூபா 545.91 மில்லியனால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(ஈ) **எல்கேஏஎஸ் 20 – அரசாங்க மானியங்களிற்கான கணக்கீடும் அரசாங்க உதவிகளின் வெளிப்படுத்துகையும் -**

(i) 11 ஆண்டுகளிற்கு மேலாக மாற்றமடையாதிருந்த ரூபா 9,453.27 மில்லியன் கூட்டுத்தொகையான 28 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் கீழ் ஏற்பட்ட மொத்தக் கிரயம் தீர்க்கப்படாமல் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. அந்த வெளிநாட்டு மானியங்கள் தொடர்பான தகவல்கள் கிடைக்காமையால் நிதிக்கூற்றுக்களிற்கான தாக்கத்தை கணக்காய்வில் மதிப்பிட முடியாதிருந்தது.

(ii) வெளிநாட்டு மானியங்களாக கணக்கிடப்பட்ட குறித்த செயற்திட்டங்கள் தொடர்பான ரூபா 2,478.24 மில்லியன் பெறுமதியான இனங்காணப்படாத கொடுக்கல் வாங்கல்கள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டப்பட்டிருக்கவில்லை.

(உ) **எல்கேஏஎஸ் 40- முதலீட்டுச் சொத்துக்கள்**

ரூபா 352.06 மில்லியன் தொகையான முதலீட்டு ஆதனத்தின் பெறுமதி மதிப்பிடுகையில் நியமத்தின் 75 மற்றும் 79 ஆம் பிரிவின் பிரகாரம் நிதி நிலமைக் கூற்றில் தனித்தனியாக காட்டப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 12 செயற்திட்டங்கள் தொடர்பில் நடைபெறும் வேலையின் கீழ் காட்டப்பட்ட ரூபா 228,559,097 கூட்டுத் தொகையான மீதிகள் நிதிக்கூற்றுக்களில் அவசியமான சீராக்கல்களை செய்யும் நோக்கில் புலனாய்வு செய்யாமல் மூன்று முதல் பத்து ஆண்டுகால வீச்சில் மாற்றமடையாதிருந்தது.

(ஆ) ரூபா 5,534,819,630 கிரயத்திலான அறுபத்து நான்கு பூர்த்தியாக்கப்பட்ட மற்றும் ஒருமித்த நீர் வழங்கல் செயற்திட்டங்கள் மூலதனமாக்கப்படாமல் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைபெறும் வேலைகளில் இருந்தது.

(இ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு டிஐ குழாய்கள் மற்றும் பொருத்திகள் இருப்பின் பெறுமதி கணக்கீட்டு தவறு காரணமாக முறையே ரூபா 6,878,121 மற்றும் ரூபா 7,246,655 ஆல் அதிகரித்தும் குறைத்தும் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பழுதடைந்த இருப்பிற்காக ரூபா 4,324,111 ஆன மேலதிக ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் இதன் விளைவால், மீளாய்வாண்டின் இலாபம் அதே தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(உ) சபையின் தலைமை அலுவலக கைப்பிடிச் சுவரை இணைத்து ரூபா 6,870,296 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் வீதி நிர்மாணத்தின் போது சுவருக்கு விளைந்த சேதம் காரணமாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் 2014 இல் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அதில் ரூபா 3,424,712 ஆன தொகை மீளாய்வாண்டின் இறுதியில் சபையால் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2015 இலிருந்து நடைமுறையல்லா சொத்தின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 192,452,347 கிரயத்தில் புல்மோட்டையில் சிறிய நகரங்கள் நீர் வழங்கல் செயற்திட்டம் மீளாய்வாண்டின் போது வெளிநாட்டு மானியங்கள் மற்றும் மீளளிக்கக்கூடிய திட்டத்தின் கீழ் இரண்டு தடவை தீர்க்கப்பட்டிருந்தது. எனவே, மீளாய்வாண்டிற்கான இலாபம் ரூபா 3,364,558 ஆல் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(எ) இருப்புச் சீராக்கல் கணக்கில் காட்டப்பட்ட ரூபா 2,421,893 ஆன இருப்புக் குறைவை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) சபைக்கு சொந்தமான மற்றும் தலைமை அலுவலக ஜப்பான் செயற்திட்ட பிரிவால் பயன்படுத்தப்பட்ட ரூபா 631,049 பெறுமதியான தளபாடம் மற்றும் கணனி உபகரணங்கள் சொத்துக் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 63,287,387 தொகையான பொருளாதார சேவைக் கட்டணங்கள் பெறவேண்டியவைகளாக இனங்காணப்படாமல் 2016 ஆம் ஆண்டிற்கான வருமான வரிச் செலவினமாக தவறாக இனங்காணப்பட்டிருந்தது. எனவே, மீளாய்வாண்டிற்கான ஆண்டு இலாபம் மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் அதே தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(ஒ) சபையானது ஒவ்வொரு ஆண்டிலும் முன்னைய ஆண்டு சீராக்கல்களை செய்கையில் நிறுத்திவைத்த இலாபம் / (நட்டத்திற்கு) குறிப்பிடத்தக்களவு சீராக்கல்களை தொடர்ச்சியாக் செய்வது வழமையாக உள்ளது என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. இதன் விளைவால், ஒவ்வொரு அண்டிற்கான இலாபம் கருத்திற்கொள்ளக்கூடியளவு தொகையால் வீழ்ச்சியடைந்திருந்தது. அத்தகைய முன்னைய சீராக்கல்களின் விளைவால் 2013 முதல் 2015 வரையான காலத்திற்காக நிறுத்திவைத்த இலாபம் / (நட்டத்திற்கு) தேறிய தாக்கம் ரூபா 345.9 மில்லியனாக இருந்தது. நான்காவது ஆண்டில் மீளாய்வாண்டிற்கான இலாபத்திற்கான சீராக்கல்கள் செய்வதற்கான சாத்தியத்தன்மை கணக்காய்வில் மதிப்பிட முடியாதிருந்தது. எனவே, மீளாய்வாண்டிற்கான இலாபத்தின் பொருண்மை மற்றும் உண்மைத்தன்மை கணக்காய்வில் திருப்திகரமாக ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுகளில் அத்தகைய சீராக்க்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **ஆண்டு** | **வரவு வைக்கப்பட்ட தொகை** | **செலவு வைக்கப்பட்ட தொகை** | **திரண்ட இலாபத்திற்கான தேறிய தாக்கம்** |
|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| 2016 | (455,977,322) | 336,150,543 | (119,826,779) |
| 2015 | (184,251,720) | 192,301,771 | 8,050,051 |
| 2014 | (88,633,609) | 269,544,864 | 180,911,255 |

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உதவி அடிப்படையிலான வெளியீடு மீதான உலகலாவிய பங்குபற்றல் செயற்திட்டத்தால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெளிநாட்டு மானியத்தின் பெறுமதி ரூபா 212,666,110 ஆகும். எவ்வாறாயினும், சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், இது ரூபா 282,644,182 ஆக காட்டப்பட்டது. எனவே, ரூபா 69,978,072 ஆன விளக்கமளிக்கப்படாத வித்தியாசம் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2016 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட ஒப்பீட்டு ரீதியான தொகையின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்பட்டோர் மீதி ரூபா 3,895,171,826 ஆக இருந்த போதிலும், இந்த மீதி 2015 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் ரூபா 3,813,272,977 ஆக காட்டப்பட்டிருந்தது. எனவே, ரூபா 81,898,849 ஆன வித்தியாசம் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

**2.2.4 இனங்காணப்படாத மீதிகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாத்தறை பிராந்திய ஆதரவு நிலையத்தில் பேணப்படுகின்ற நடைமுறைக் கணக்கு தொடர்பில் நீண்ட காலத்திற்கு மேலாக வங்கி கணக்கிணக்கக் கூற்றில் காட்டப்பட்ட ரூபா 179,347 ஆன இனங்காணப்படாத மீதி தொடர்பில் அர்த்தமுள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளக காசு மாற்றல் கட்டுப்பாட்டு கணக்கு மீதி ஆண்டு இறுதியில் பூச்சிய மீதியாக காட்டப்பட வேண்டிய போதிலும் ரூபா 2,434,907 மொத்தமான செலவு மீதிகள் தெளிவுபடுத்தப்படாமல் இந்த கட்டுப்பாட்டு கணக்கில் இருந்தது.

(இ) புதிய இணைப்புக் கட்டுப்பாட்டுக் கணக்கின் காலப்பகுப்பாய்வின் பிரகாரம், திருகோணமலை பிராந்தியம் தொடர்பில் ரூபா 1,155,154 கூட்டுமொத்தமான கடன்பட்டோர் மீதிகள் 4 ஆண்டுகளிற்கு மேலாக இனங்காணப்பட்டு இணக்கம் செய்யப்படாமல் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஈ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திருகோணமலை பிராந்தியம் தொடர்பில் சேகரிப்பு கட்டுப்பாட்டுக் கணக்கிலுள்ள வரவு மீதிகள் ரூபா 8,677,004 ஆக இருந்தது. அதில், ரூபா 5,108,669 மற்றும் ரூபா 2,494,371 தொகை முறையே 4 ஆண்டுகள் மற்றும் 2 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருக்கின்றது.

(உ) 3 ஆண்டுகளிற்கு மேலாக புனரமைப்பு வரியாக நிதிக்கூற்றுக்களிற்கு ரூபா 1,721,237 ஆன மீதிகள் கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் இந்த கணக்கு உருவாகின்றதற்கான காரணம் கணக்காய்விற்கு விளக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

ரூபா 614,524,704 மற்றும் ரூபா 474,096,453 பெறுமதியான அசையாத மற்றும் மெதுவாக அசையும் இருப்புக்கள் தொடர்பில் வில்கமுவ நீர் வழங்கல் செயற்திட்டத்தின் சாத்திய வள அறிக்கை மற்றும் விரிவான பட்டியல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3. கிடைக்கவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வியாபார கடன்பட்டோர், கழிவகற்றல் கடன்பட்டோர், கொழும்பு மாநகர சபை கடன்பட்டோர், புதிய கடன்பட்டோர் சேகரிப்பு மற்றும் ஏனைய கடன்பட்டோர் ஆகியோரின் ரூபா 282,919,175 கூட்டுத்தொகையான மீதிகள் 3 ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாமல் இருந்தன.

(ஆ) ரூபா 10,529,933 தொகையான விசேட மிகையூதிய முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்படாமல் 17 ஆண்டுகளிற்கு மேலாக இருந்தது.

(இ) வீதி அபிவிருத்தி அதிகாரசபை (ஆர்டிஏ) மற்றும் கொழும்பு மாநகர என்பவற்றில் சபையால் வைத்திருக்கப்பட்ட ரூபா 26,624,610 கூட்டுத்தொகையான குறுகிய கால வைப்பு மீதிகள் 2002 ஆம் ஆண்டிலிருந்து அறவிடப்படாமல் இருந்தன. மேலும், வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் பிராந்திய ஆதரவு நிலையம் (மத்திய) மற்றும் மத்திய மாகாண சபை என்பவற்றால் வைத்திருக்கப்பட்ட ரூபா 2,801,222 கூட்டுத்தொகையான குறுகிய கால வைப்பு மீதிகள் 2010 ஆம் ஆண்டிலிருந்து அறவிடப்படாமல் இருந்தன.

(ஈ) முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சிற்கு வழங்கப்பட்ட ரூபா 4,378,829 தொகையான முற்பணங்கள் 2016 ஆம் ஆண்டின் போது தொங்கல் கடன்பட்டோர் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. மேலும், 2016 ஆம் ஆண்டு இறுதியில் முற்பணக் கணக்கில் இருந்த ரூபா 15,227,491 ஆன இன்னொரு மீதியும் எவ்வித காரணங்களும் இல்லாமல் இந்த கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

(உ) ஒப்பந்தகாரர்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 31,314,650 மற்றும் ரூபா 13,121,877 மொத்தமான முற்பணங்கள் முறையே எட்டு ஆண்டுகளிற்கு மேலாகவும் மூன்று ஆண்டுகளிற்கு மேலாகவும் தீர்ப்பனவு செய்யப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதிவரையும் இந்த மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 1997 முதல் 2015 வரையான காலத்தின் போது கொள்வனவு செய்வதற்கு உத்தியோகத்தர்கள் மற்றும் நிறுவனங்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 274,126 கூட்டுமொத்தமான முற்பணங்கள் இன்னமும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) விசேட செயற்திட்டங்களிற்காக வழங்கப்பட்ட ரூபா 5,520,606 மொத்தமான முற்பணங்களை மூன்று ஆண்டுகளிற்கு மேலாக உரிய தரப்பினரால் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) காணி சுவீகரிக்கப்பட்டிருந்த போதிலும், 2009 முதல் 2013 வரையான காலத்தின் போது ரூபா 94,276,927 தொகையான அத்தகைய காணியின் சுவீகரிப்பிற்காக வழங்கப்பட்ட முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) கண்டி கிழக்கு பிராந்தியத்தால் 2013 ஆம் ஆண்டிலிருந்து தீர்ப்பனவு செய்யப்படாமல் ரூபா 27,182,581 மொத்தமான கடன்கொடுத்தோர் விடப்பட்டிருந்தது.

(ஒ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கோரப்படாதிருந்த சம்பளங்கள் மற்றும் கூலிகள் ரூபா 5,419,070 ஆக இருந்ததுடன் இது மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு மொத்த செலுத்த வேண்டியவற்றின் 67 சதவீதமாக இருநதது.

(ஓ) நகர அபிவிருத்தி செயற்திட்டம் தொடர்பில் உள்நாட்டு வங்கிகளிற்கு செலுத்த வேண்டிய ரூபா 20,713,131 ஆன உள்நாட்டு கடன் மீதி 2011 இலிருந்து மீளாய்வாண்டின் இறுதிவரை தீர்க்கப்படாமல் இருந்தன.

**2.4. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | | இணங்காமை |
|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்தின் நிதிப் பிரமாணங்கள் | | |
| (i) நிதிப்பிரமாணம் 395(இ) | | வங்கி கணக்கிணக்கங்கள் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், 2016 திசெம்பர் மாதத்திற்கான சகல வங்கி கணக்குகளினதும் வங்கி கணக்கிணக்கங்கள் 2017 சனவரி 15 இற்கு பின்னரே தயாரிக்கப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 770 | | ரூபா 16,117,179 பெறுமதியான பழுதடைந்த இருப்புக்கள் நிதிப்பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டவாறு அவசியான நடவடிக்கை எடுக்காமல் 2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) 2006 செப்தெம்பர் 22 ஆந்திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | | சபையின் ஆட்சேர்ப்புகள் மற்றும் பதவி உயர்களின் திட்டத்திற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவு | i | பதினொரு மோட்டார் வாகனங்கள் 2016 சனவரி முதல் திசெம்பர் வரையான காலத்தின் போது வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக அந்த வாகனங்களின் அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதிக் கொள்கைகளை புதுப்பிப்பதற்காக சபைக்கு ரூபா 1,666,150 ஏற்பட்டிருந்தது. |
| | ii | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக மீளாய்வாண்டின் போது வரிசை அமைச்சு மற்றும் ஏனைய அமைச்சுக்களுக்கு முப்பத்து ஒன்பது ஊழியர்கள் விடுவிக்கப்பட்டிருந்தார்கள். சபையால் அந்த ஊழியர்களிற்கு செலுத்தப்பட்ட சம்பளங்கள் உரிய தரப்பினரால் மீளளிக்கப்பட்டிருக்கவில்லை. |

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 1,149,598,362 வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடும் போது ரூபா 2,989,591,779 வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தினை விளைவித்திருந்தது ஆதலால், நிதிசார் விளைவுகளில் ரூபா 1,839,993,417 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது விற்பனைகள் மற்றும் ஏனைய செயற்பாட்டு வருமானங்கள் மற்றும் இலாபங்களில். ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு நிதி விளைவுகளின் இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக பங்களித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளிற்கான நிதிசார் விளைவுகளின் பகுப்பாய்வு 2012 ஆம் ஆண்டில் ரூபா 407,019,536 ஆன மிகை 2016 ஆம் ஆண்டில் ஏற்ற இறக்கத்துடன் ரூபா 2,989,591,779 இற்கு அதிகரித்திருந்தது. இருந்த போதிலும், ஊழியர்களுடைய வேதனங்கள், நடைமுறையல்லாச் சொத்துக்கள் மீதான பெறுமானத்தேய்வு மற்றும் அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்ட வரிகள் என்பவற்றினை கணக்கிற்குள் எடுத்த பின்னர் 2012 ஆம் ஆண்டில் ரூபா 10,374,694,060 ஆன மிகை 2016 ஆம் ஆண்டில் ஏற்ற இறக்கத்துடன் ரூபா 15,879,602,172 இற்கு அதிகரித்திருந்தது.

## 3.2. பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

### 3.2.1 இலாபத்தன்மை

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் மொத்த இலாபம் 27 சதவீதத்தால் அதகரித்திருந்த அதேநேரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிர்வாகச் செலவினம் 7 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. எனவே, மீளாய்வாண்டின் போது ரூபா 1,756,594,590 ஆன செயற்பாட்டு இலாபம் பதிவுசெய்திருந்ததுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2870 சதவீதத்தால் முன்னேற்றமடைந்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 174 சதவீதத்தால் ஆண்டிற்கான இலாபத்தின் அதிகரிப்பு முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக பங்களித்திருந்தது.

(ஆ) 2015 ஆம் ஆண்டில் ஒரு ஊழியருக்கான ரூபா 774,768 ஆன பங்களிப்பு 2016 ஆம் ஆண்டில் 29.01 சதவீதத்தால் அதிகரித்திருந்த அதேநேரம், 2015 ஆம் ஆண்டில் ஒரு ஊழியருக்கான தேறிய இலாபம் ரூபா 104,156 ஆனது 2016 ஆம் ஆண்டில் ரூபா 281,505 இற்கு குறைவடைந்திருந்ததுடன் 178.06 சதவீத அதிகரிப்பை வெளிப்படுத்தப்படுகின்றது.

(இ) 2015 ஆம் ஆண்டில் நுகரப்பட்ட தண்ணீரின் ஒரு அலகிற்கு ரூபா 40.99 ஆன வருமானம் 2016 ஆம் ஆண்டில் 5 சதவீதத்தால் அதிகரித்திருந்த அதேநேரம் 2015 ஆம் ஆண்டில் நுகரப்பட்ட தண்ணீரின் ஒரு அலகிற்கு ரூபா 46.79 ஆன உற்பத்திக் கிரயம் 2016 ஆம் ஆண்டில் ரூபா 45.48 அல்லது 3 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

### 3.2.2 குறிப்பிடத்தக்களவு கணக்கீட்டு விகிதங்கள்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 3 ஆண்டிற்கான சில குறிப்பிடத்தக்களவு கணக்கீட்டு விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | 2016 | 2015 | 2014 | 2013 |
|---|---|---|---|---|
| மொத்த இலாப எல்லை | 42.82 | 39.19 | 39.47 | 41.35 |
| தேறிய இலாப எல்லை | 12.68 | 5.53 | 7.62 | 5.87 |
| நடைமுறை விகிதம் | 5.97 | 4.48 | 1.76 | 1.29 |

மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், மொத்த இலாப எல்லை மற்றும் தேறிய இலாப எல்லை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே 9.26 சதவீதம் மற்றும் 129.29 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 4. தொழிற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

சபையின் பிரதான நோக்கங்களை அடைவது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) சுத்தமான தண்ணீரின் உற்பத்தியும் விநியோகமும்**

சபையானது 2015 ஆம் ஆண்டின் போது சுத்தமான தண்ணீர் 600 மில்லியன் கனமீற்றர் உற்பத்தியுடன் ஒப்பிடும் போது 2016 ஆம் ஆண்டின் போது 649 மில்லியன் கனமீற்றர் சுத்தமான தண்ணீரை உற்பத்தி செய்திருந்ததுடன் சுத்தமான தண்ணீரை உற்பத்தியில் அதிகரிப்பு 8.16 சதவீதத்தைக் காட்டுகின்றது. 2012 முதல் 2016 வரையான ஆண்டுகளின் போது ஒரு அலகிற்கான உற்பத்திக் கிரயம் பின்வருமாறு உள்ளது.

| ஆண்டு | 2016 | 2015 | 2014 | 2013 | 2012 |
|---|---|---|---|---|---|
| அலகு கிரயம் (ரூபா) | 45.27 | 46.79 | 43.96 | 44.39 | 41.22 |

மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையின் பிரகாரம், மீளாய்வாண்டில் ஒரு அலகு உற்பத்திக் கிரயம் 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 9.82 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 2012 முதல் 2016 வரையான காலத்தின் போது பதவியணிக் கிரயம் மற்றும் மின்சக்திக் கிரயம் என்பவற்றில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு இந்த அதிகரிப்பிற்கான பிரதான காரணமாக இருந்தன.

மீளாய்வாண்டு இறுதிவரை வழங்கப்பட்ட இணைப்புக்களின் எண்ணிக்கை 138,795 ஆக இருந்தமையால், முனனைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 13.91 சதவீத அதிகரிப்பைக் காட்டுகின்றது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக குறிப்பிடப்பட்ட இலக்கின் பிரகாரம், இது மீளாய்வாண்டின் போது 140,676 புதிய இணைப்புக்கள் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது 138,750 புதிய இணைப்புக்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

**(இ) வருமானமற்ற நீர் (என்ஆர்டபிள்யூ)**

வருமானமற்ற நீர் காரணமாக சபைக்கு ஏற்பட்ட நட்டம் இனங்காணப்பட்டு தனியாகக் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. ஆனால் இது, சாதாரண கிரயமாக கணக்கிற்குக் கொண்டு வரப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு மற்றும் கடந்த நான்கு ஆண்டுகளிற்கான வருமானமற்ற நீரின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| விபரம் | 2016 | 2015 | 2014 | 2013 | 2012 |
|---|---|---|---|---|---|
| தண்ணீர் உற்பத்தி (கன மீற்றர்) | 649 | 600.14 | 575.00 | 547.0 | 525.6 |
| தண்ணீர் நுகர்வு (கன மீற்றர்) | 483 | 436.27 | 410.92 | 381.6 | 368.5 |
| வருமானமற்ற நீர் (கன மீற்றர்) | 166 | 163.87 | 137.07 | 165.4 | 157.1 |
| **தண்ணீர் உற்பத்தியின் சதவீதமாக வருமானமற்ற நீர்** | **25.58** | **27.30** | **28.53** | **30.24** | **29.89** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 ஆம் ஆண்டில் சபையால் உற்பத்தி செய்யப்பட்ட நீரின் அளவில் நீர்க்கசிவு, சட்ட விரோத இணைப்புக்கள், இலவசமாக வழங்கல் மற்றும் நிர்வாக காரணங்கள் போன்றன காரணமாக வருமானமற்ற நீர் 25.58 சதவீதத்தைப் பிரதிதித்துவப்படுத்தியது. 2016 இல் கொழும்பு நகரத்தின் வருமானமற்ற நீர் பகுதி 44.25 சதவீதமாக இருந்தது.

(ii) சபையானது சட்ட விரோத இணைப்புக்களைக் குறைப்பதற்கும், நீர் விநியோக குழாய்களில் தற்காலிக தடங்கலை திருத்தும் முறைமைகளை விரைவுபடுத்துவதற்கும் கடந்த காலங்களில் முக்கியமான நடவடிக்கைகளை எடுத்திருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது நடப்பாண்டில் வருமானமற்ற நீரின் (கனமீற்றர்) வீதம் 5.66 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(iii) 75 ஆண்டுகளிற்கு மேல் பழமைவாய்ந்த கொழும்பு நகரத்தின் பிரதான நீர் விநியோக முறைமைகளைப் நவீனப்படுத்துவதற்கான தேவை ஏற்பட்டதால் அந்த நோக்கத்திற்கான திட்டங்களைத் தயாரித்து, அமுல்ப்படுத்துவதற்காக சபையின் கவனம் அவசரமாக கோரப்படுகின்றது. தற்போது இது தொடர்பாக இரண்டு வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்படுகின்ற போதிலும், பிரதான நீர விநியோக முறைமைகளின் போதிய மீள்நிர்மாணம் அதிலிருந்து அடையப்பட்டிருக்கவில்லை.

(iv) நீர்க் கசிவுகள் காரணமாக மீளமைக்கப்பட வேண்டிய பிரதான நீர் விநியோக முறைமைகள் இதுவரை விசேடமாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. பல்வேறு பிரதான செயற்திட்டங்களின் அமுலாக்கலிற்கான பிரேரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அவற்றினுடைய அமுலாக்கல் மிக மெதுவான மட்டத்திலேயே நகர்ந்திருந்தன.

(v) கொழும்பு நகரைத் தவிர்ந்த பிரதேசங்களில் வருமானமற்ற நீரைக் குறைப்பதற்காக சபையின் கவனம் போதாமலிருந்ததுடன் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட இலக்குகளும் சாத்தியமற்றவையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(vi) ரூபா 3,100.17 மில்லியன் மதிப்பிடப்பட்ட செலவினத்துடன் 6 செயற்திட்டங்கள் வருமானமற்ற நீரை குறைப்பதற்கு தொடங்கப்பட்டிருந்த போதிலும் கருத்திற்கொள்ளத்தக்க குறைவு இனங்காணப்பட முடியாதிருந்தது.

**(ஈ) கழிவுநீர் முறைமை**

நகரங்களில் கழிவு நீரகற்றுவதற்கான உட்கட்டமைப்பு வசதிகளிற்கான முன்னேற்றங்களை மேற்கொள்வதற்கான தேவை நாட்டின் பொருளாதார அபிவிருத்தியுடன் சேர்ந்ததாக இடம்பெற்ற நகரமயமாக்கல் காரணமாக ஏற்பட்டிருந்தது. அத்தகைய வசதிகளை வழங்குதல் சபையின் பொறுப்பாக இருந்த போதிலும், அண்மைய ஆண்டுகளில் இந்தப் பிரிவில் போதிய முன்னேற்றம் காட்டப்பட்டிருக்கவில்லை. கழிவுநீரகற்றும் வசதிகளின் வழங்கல், ஒரு தேசியக் கொள்கையாக சனத்தொகையின் 7 சதவீதமாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், அதன் எய்தலை பரிசோதிப்பதற்கான தகவல் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

**(உ) இலக்குகளின் அடைதல்**

மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்ட இலக்குகள் மற்றும் அவற்றின் அடைதல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வருமானமற்ற நீரின் சதவீதத்தை குறைப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்ததை அடையும்நோக்கில் 12 பிராந்திய ஆதார நிலையங்களில் ஐந்து மாத்திரமே அந்த இலக்கினை அடைய முடிந்திருந்தது. மேலும், கொழும்பு நகரத்தில் 44.25 சதவீதம் வரை மொத்த வருமானமற்ற நீரை குறைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு உள்ளபடியான குறைப்பு 45.85 சதவீதமாக இருந்தது.

(ii) மொத்த குழாய் நீர் வழங்கல் மேவுகை மற்றும் மொத்த கழிவகற்றல் இணைப்புக்களின் மேவுகை மொத்த சனத்தொகையின் 49.8 சதவீதம் மற்றும் 2.4 சதவீதம் வரை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு உள்ளபடியான மேவுகை முறையே 47.7 சதவீதம் மற்றும் 2 சதவீதமாக மாத்திரமே இருந்தன.

**4.2. வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களை அமுல்படுத்தல்**

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதிகளைப் பயன்படுத்தி நீர் வழங்கல் மற்றும் சுகாதார சேவைகளிற்காக பெரும் எண்ணிக்கையான செயற்திட்டங்கள் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், இது தொடர்பில் பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) அதிகமான பாரிய மட்ட வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் உரிய திகதிகளில் பூர்த்திசெய்யப்பட்டிருக்காததுடன் செயற்திட்டக் காலங்களை நீடித்தமையின் விளைவாக மேலதிக வேலைகள் மற்றும் விலை அதிகரிப்புக்கள் காரணமாக கிரயங்கள் மிக உயர்வாக ஏற்பட்டிருந்தது.

(ஆ) அத்தகைய செயற்திட்டங்களின் நிதிக்கூற்றுக்களினை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலிற்காக சீரான கணக்கீட்டுக் கொள்கைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

**(இ) யாழ்ப்பாணம், கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரச் செயற்திட்டம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் நடைபெறும் வேலைகள் ரூபா 2,023 மில்லியனாகும். எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், இது ரூபா 2,236 மில்லியனாக காட்டப்பட்டிருந்தது. வித்தியாசமான ரூபா 213 மில்லியன் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) 1974 இன் 2 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் பிரகாரம், காணி சுவீகரிப்பு அதிகாரச்சட்டத்தின் கீழ் சுவீகரிக்கப்பட்ட அசையாத சொத்துக்கள் சபைக்கு மாற்றப்பட வேண்டும். மேலும், அசையாத சொத்துக்களின் விசேட தேவைக் கொள்வனவு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை என 2015 மார்ச் 11 இல் சட்ட மா அதிபர் அபிப்பிராயம் வழங்கியிருந்தார். எவ்வாறாயினும், செய்திட்டமானது நல்லூரில் காணிக் கொள்வனவிற்காக 2013 மார்ச் மாதத்தில் ரூபா 2.5 மில்லியன் செலவழித்திருந்தது.

## (ஈ) உலர் வலய நகர நீர் மற்றும் சுகாதார செயற்திட்டம்

-----------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையுடன் கைசாத்திருந்த துணைநிலைக் கடன் உடன்படிக்கையின் கீழ் பொதுத் திறைசேரியால் சாட்டுதல் செய்யப்பட்ட 2014 திசெம்பர் 31 வரையான ரூபா 68.50 மில்லியன் தொகையான வட்டி செயற்திட்டத்தின் நடைபெறும் வெலைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ii) 2016 திசெம்பர் 31 வரை செலுத்தப்பட்ட ரூபா 131.17 மில்லியன் கூட்டுத் தொகையான பெறுமதி சேர் வரி நடைபெறும் வேலையின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட அரசாங்க பங்களிப்பு பெறுகைகளிற்கு எதிராக சரிசெய்யப்பட்டிருந்தது. இதன் விளைவால், நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு மற்றும் நடைபெறும் வேலைகள் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(iii) கடன் உடன்படிக்கையின் 5 ஆம் பட்டோலையின் 15 ஆம் பந்தியின் பிரகாரம், நீர் வழங்கல் கொள்கை மற்றும் சுகாதாரக் கொள்கை செயற்திட்டத்தால் அமுலாக்கப்படுவதற்கு மன்னர் அமைச்சரவையால் அனுமதிக்கப்பட வேண்டும். நீர் வழங்கல் கொள்கை 2010 மார்ச் 03 இல் அமைச்சரவையால் அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும் சுகாதாரக் கொள்கை 2016 திசெம்பர் 31 வரையும் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) கடன் உடன்படிக்கையின் 5 ஆம் பட்டோலையின் 18 ஆம் பந்தியின் பிரகாரம், நகர சபைகள் வெளியேற்றப்பட்ட கழிவு மற்றும் உலர்த்தப்பட்ட கழிவு வெளியேற்றத்தின் நுண்ணியல் தரம் என்பவற்றுடன் சுத்திகரிக்கப்பட்ட கழிவு, தண்ணீரின் தரம் என்பவற்றின் தரம் மற்றும் அளவினை ஒழுங்கான கணக்காணிப்பு நடாத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், வினைத்திறனான முகாமைத்தவத்திற்காக நகர சபைகளால் கண்காணிப்பு பொறிமுறைகளை அமுலாக்குவது தொடர்பில் தகவல்கள் எதுவும் பெறப்பட்டிருக்கவில்லை.

(v) படிமுறை முன்னேற்ற வேலைகளிற்காக செயற்திட்டத்தால் உதவியளிக்கப்பட்ட நகர சபைகள் மேவுகைச் செயற்பாடு மற்றும் பராமரிப்புக் கிரயம் என்பவற்றிற்கு இயலக்கூடியவாறு படிமுறையான சேகரிப்புகள் மற்றும் அகற்றுதல்கள் என்பவற்றிற்கான சட்டங்கள் மூலம் தீர்வினை வழங்குவதற்கும் கட்டணத்தை அறிமுகப்படுத்தவதற்கும் புதிய ஆதன அபிவிருத்தியில் படிமுறையாக தொட்டிகளின் கட்டாயமான பாவனையை அறிமுகப்படுத்துவதற்கும் ஆரம்ப கட்டத்தில் அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், அவற்றின் மீதான பிரேரணைகளை அமுலாக்குவதற்கு நகர சபைகளால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) செயற்திட்ட பணிப்பாளர் முழு நேர அடிப்படையில் கடமைகளிற்காக சமூகமளித்திருக்கவில்லை அத்துடன் அந்த விடயம் செயற்திட்டத்தின் பௌதீக மற்றும் நிதி இலக்குகளை அடைவதற்கு பாரதூரமாக பாதித்திருந்தது.

(vii) செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை நெருக்கமாக கண்காணிப்பதற்கு நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையும் இணைந்து நடவடிக்கை எடுப்பதற்கு 2013 ஏப்ரல் 05 இல் நடைபெற்ற அதன் கூட்டத்தில் அமைச்சரவை தீர்மானித்தது. எவ்வாறாயினும், இது தொடர்பில் 2016 திசெம்பர் 31 வரையும் இரண்டு தரப்பினராலும் பொருத்தமான பொறிமுறை எதுவும் அறுமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(viii) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது கமநல திணைக்களத்தின் ஒத்துழைப்பினை பெற்றுக்கொள்ளாமல் வவுனியாவில் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளரின் உதவியுடன் 03 நீர்ப்பாசன குளங்களை புதுப்பித்தலிற்கும் நெற் பயிர்ச்செய்கைக்காக பதியக்குளம் மற்றும் கற்களம் காணிகளின் நிரப்பலிற்கும் 2014 இல் புரிந்துணர்வு விஞ்ஞாபனம் கைச்சாத்திடப்பட்டது. எவ்வாறாயினும், நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் நிர்வாக நலிவுகள் மற்றும் போதிய மேற்பார்வை இன்மையால் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மெதுவாக இருந்தது. இந்த விடயம் என்னுடைய முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டமானது இது தொடர்பில் திருப்திகரமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் 8.9.3 ஆம் வழிகாட்டலின் பிரகாரம், ரூபா 500 மில்லியன் அல்லது அதற்கு மேல் உள்ள ஒப்பந்தத்தின் பெறுமதி வரிசை அமைச்சு செயலாளரால் கையொப்பமிடப்பட வேண்டும். எவ்வாறாயினும், பின்வரும் ஒப்பந்தங்கள் மேற்குறிப்பிட்ட வேண்டுகைக்கு முரணாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தலைவரால் கையொப்பமிடப்பட்டிருந்தது.

| **செயற்திட்டத்தின் பெயர்** | **ஒப்பந்தத்தின் பெயர்** | **பெறுமதி** |
|---|---|---|
| | | **ரூபா மில்லியன்** |
| கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்-செயற்திட்டம் 01 (கடன் இல. 2947 எஸ்ஆர்ஐ மற்றும் 2948 எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) | வருமானமற்ற தண்ணீர் முகாமைத்துவம் நிர்மாண மேற்பார்வை ஆலோசனை ஒப்பந்தம் | 216 |
| கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்-செயற்திட்டம் 2 | கொழும்பு நகரத்தின் தெற்குப் பகுதியில் வருமானமற்ற தண்ணீரின் குறைப்பிற்கான முறைமை புனரமைப்பு மற்றும் கொழும்பு நகரத்தின் மேற்குப் பகுதியில் வருமானமற்ற தண்ணீரின் குறைப்பிற்கான முறைமை புனரமைப்பு | 6,991 மற்றும் 6,555 |
| கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்-செயற்திட்டம் 2 ஏஎவ்டி (அம்பத்தளை மின்சார சேமிப்பு செயற்திட்டம்) | 9 கிமீ டிரீ குழாய்களின் (1200 மிமி ளையை) வழங்கல் மற்றும் குழாயிடல் மற்றும் எலிய கவுஸ் நீர்த் தேக்கத்திற்கான அம்பத்தளையிலிருந்தான உபபாகங்கள் | 2,565 |

| | | |
|---|---|---|
| கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் 01 (கடன் இல. 2947 எஸ்ஆர்ஜ மற்றும் 2948 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) | கொழும்பு நகரத்தின் வடக்குப் பகுதியில் வருமானமற்ற தண்ணீரின் குறைப்பிற்கான முறைமை புனரமைப்பு மற்றும் கொழும்பு நகரத்தின் கிழக்குப் பகுதியில் வருமானமற்ற தண்ணீரின் குறைப்பிற்கான முறைமை புனரமைப்பு | 1,041 மற்றும் 5,001 |
| கம்பள, அத்தனாகல மற்றும் மினுவாங்கொட ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டம் | ஒப்பந்த இல. P&P/DB/ CHINA/EXIM/GAMIWSS/2013/01 | 33,060 |

**(ஊ) மொனறாகலை, புட்டளை நீர் வழங்கல் திட்டம்**

செயற்திட்டத்தின் திருத்தப்பட்ட பொறியியலாளர் மதிப்பீடு யூரோ 19.67 மில்லியனாக இருந்த போதிலும் ஒப்பந்தமானது 21.91 சதவீத அதிகரிப்புடன் யூரோ 23.98 மில்லியன் பெறுமதிக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும், கொள்வனவு வழிகாட்டல்கள் - 2006 இன் 8.7.1(அ) ஆம் வழிகாட்டலில் வேண்டப்பட்டவாறு ஒப்பந்தம் வழங்குவதற்கு முன்னர் பாதீட்டு ஏற்பாட்டின் கிடைப்பனவுத் தன்மை கவனத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(எ) நீர் வழங்கல் செயற்திட்டத்தின் புனரமைப்பு- லவுகம, கலறுவவ**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஆம் அண்டின் போது செயற்திட்டத்தால் நான்கு டபிள் கபட மற்றும் ஒரு வான் கொள்வனவு செய்வதற்கு ரூபா 66,017,868 ஆன தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. முறையான வரையறுத்த குறிப்புரைகள் மற்றும் உண்மையான நாடு என்பன இன்மையால் ஒப்பந்தகாரருக்கு ரூபா 38,089,103 ஆன மேலதிக கிரயம் செலுத்தப்பட வேண்டியிருந்தது என மேலும் அவதானிக்கப்பட்டது.

(ii) மீளாய்வாண்டின் போது புதிய அலுவலக கட்டிடம் மற்றும் 4 உத்தியோகபூர்வ விடுதிகள் என்பவற்றின் நிர்மாணத்திற்காக செயற்திட்டத்தால் ஒப்பந்தகாரருக்கு ரூபா 119,391,800 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. ஆரம்ப கொடுப்பனவு சான்றிதழின் பிரகாரம், புதிய அலுவலக கட்டிடம் மற்றும் உத்தியோகபூர்வ விடுதிகள் என்பவற்றின் ஒரு சதுர அடிக்கான கிரயம் முறையே ரூபா 27,758 மற்றும் ரூபா 10,416 ஆக இருந்தது. பல அரசாங்க நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் பிரகாரம், அதே வகையான புதிய அலுவலக கட்டிடம் மற்றும் உத்தியோகபூர்வ விடுதிகள் என்பவற்றின் சதுர அடிக்கான சந்தை வீதம் முறையே ரூபா 5,570 மற்றும் ரூபா 4,997 ஆக இருந்தது. இதன் விளைவால் ஒப்பந்தகாரரால் கோரப்பட்ட வீதம் நிலவுகின்ற சந்தை வீதத்தை விட உயர்வாக இருந்ததமையால் லவுகம செயற்திட்டத்தின் கீழ் முறையே 2,500 சதுர அடி மற்றும் 1,200 சதுர அடி விஸ்தீரணமுடைய புதிய அலுவலக கட்டிடம் மற்றும் உத்தியோகபூர்வ விடுதிகள் என்பவற்றின் நிர்மாணம் தொடர்பில் அரசாங்கத்திற்கு ரூபா 81,481,200 ஆன நட்டம் விளைந்திருந்தது.

அதேபோல, கலறுவவ செயற்திட்டத்தின் கீழான உத்தியோகபூர்வ விடுதிகளின் நிர்மாணத்திற்காக ஒரு சதுர மீற்றறிர்கான கிரயம் ரூபா 71,320 ஆக இருந்தது. 5 உத்தியோகபூர்வ விடுதிகளின் நிர்மாணத்திற்கான மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 35,659,900 ஆக இருந்தது. எவ்வாறாயினும், பல அரசாங்க நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் பிரகாரம், அதே வகையான உத்தியோகபூர்வ விடுதிகளின் சதுர மீற்றறிற்கான சந்தை வீதம் ரூபா 53,787 ஆக இருந்தது. ஆகவே, ஒப்பந்தகாரரால் கோரப்பட்ட வீதம் நிலவுகின்ற சந்தை வீதத்தை விட உயர்வாக இருந்ததுடன் 500 சதுர மீற்றற்கள் கொண்ட 5 உத்தியோகபூர்வ விடுதிகளின் நிர்மாணம் தொடர்பில் செயற்திட்டத்தால் ரூபா 8,766,500 ஆன மேலதிக கிரயம் ஏற்பட்டிருந்தது.

(iii) தண்ணீர் சுத்திகரிப்பு பொறி- கலறுவவ

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- வண்டற் படிவ தொட்டியின் தகரத் தட்டுகள் புதுப்பித்தலின் போது வண்டற் படிம தகரத் தட்டுக்கள் அகற்றப்பட்டிருந்ததுடன் அதன்பின்னர் புதிய தகரத்தட்டுக்கள் பொருத்தப்பட்டிருக்கவில்லை. இதன்விளைவால், தடிப்பமான கோடுகளுடன் தொட்டிகளில் தேங்கியிருந்த மற்றும் அவற்றின் மூலமான வண்டற் படிமம் முறைப்படி சுத்திகரிக்க முடியாதிருந்தது.

- தொழில்நுட்ப வேண்டுகையின் பிரகாரம், நாளாந்த இறுதி தண்ணீர் மாதிகளின் 8 பராமீற்றர்கள் பரிசோதிப்பதற்கு வேண்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், அத்தகைய உண்மையான கலரின் பராமீற்றர்கள் மொத்த மக்னீசியம் மற்றும் ரீஎச்எம் கலறுவவில் ஆய்வுகூடத்தால் பரிசோதிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒப்பந்த உடன்படிக்கையின் 8.3.5.1.4 ஆம் பிரிவின் பிரகாரம், ஒப்பந்தகாரர் ஒப்பந்த காலத்தின் போது இறுதி தண்ணீர் மாதிகளின் 8 பராமீற்றர்கள் பரிசோதிக்கப்பட வேண்டியிருந்தது. இருந்த போதிலும், ஒப்பந்த காலத்தின் போது பரிசோதிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஏ) தம்புள்ள பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டம்**

---

இந்த செயற்திட்டத்தின் ஆரம்ப திகதி 2012 மார்ச் 06 ஆக இருந்ததுடன் 2014 செப்தெம்பர் 05 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்யலிடப்பட்டது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரர் குறித்த ஒப்பந்த காலத்திற்குள் பூர்த்தியாக்குவதற்கு தவறியிருந்தார். பின்னர், ஒப்பந்தகாரரால் சில வேலைகள் தொடங்கப்பட்டிருக்காமை, போதிய மனித வளங்கள் ஈடுபடுத்த தவறியமை, உப ஒப்பந்தகாரரால் பல்வேறு காரணங்களால் நிர்மாண வேலைகள் கைவிடப்பட்டமை மற்றும் செயற்திட்ட வேலைகளிற்காக ஒழுங்கான கட்டங்களில் தேவையான பொருட்கள் கிடைக்காமை போன்றன காரணமாக 2017 மே 31 வரை சபையால் 4 தடவைகள் செயற்திட்டத்தின் ஒப்பந்த காலப்பகுதி நீடிக்கப்பட்டிருந்தது. மேலும், 2017 யூன் 20 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றங்கள் முறையே 88.6 சதவீதம் மற்றும் 85 சதவீதமாக இருந்தது.

ஒப்பந்தகாரர் உரிய காலப்பகுதியில் இந்த செயற்திட்ட வேலைகளை பூர்த்தியாக்குவதற்கு தவறியிருந்த போதிலும், ஐ.அ.டொலர் 108 மில்லியன் பெறுமதியில் பொலகவெல, பொதுகெர மற்றும் அலவ்வ ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டம் மற்றும் ஐ.அ.டொலர் 91.36 மில்லியன் பெறுமதியான பன்னல, மஹந்டுர, குளியாப்பிட்டிய நீர்வழங்கல் செயற்திட்டம் முறையே 2014 ஏப்ரல் 08 மற்றும் 2015 திசெம்பர் 02 இல் இந்த ஒப்பந்தகாரரக்கும் வழங்கப்பட்டிருந்தது.

## 4.3. உள்நாட்டு வங்கி கடன் நீர் வழங்கல் செயற்திட்டங்கள்

### 4.3.1 நீர் வழங்கல் செயற்திட்டம்- கந்தகெட்டிய

செயற்திட்ட வேலைகள் தொடர்பான கொள்வனவுகள் 2013 இலிருந்து தொடங்கப்பட்டிருந்த போதிலும் கொள்வனவு வழிகாட்டல் 2006 இன் 8.9 ஆம் வழிகாட்டலின் பிரகாரம், 2017 சனவரி 31 வரையும் ஒப்பந்தகாரருடன் முறையான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

### 4.3.2. அம்பாறை விநியோக வலையமைப்பு நீர் வழங்கல் செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அக்கறையின் வெளிப்படுத்தல் அழைப்பிதழ் மூலம் 2013 திசெம்பர் 11 இல் வெளியிடப்பட்ட புதினப்பத்திரிகை விளம்பரத்தின் பிரகாரம், செயற்திட்டத்தின் பொறியியலாளர் மதிப்பீடு ரூபா 3,000 மில்லியனாக இருந்தது. எவ்வாறாயினும், இந்த பெறுமதிக்காக கேள்விகள் கோருகின்ற போது ரூபா 5,184.66 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. இந்த அதிகரிப்பிற்கான காரணங்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒப்பந்தத்தின் நெறிப்படுத்தல் குழு அறிக்கையின் பிரகாரம், ஒபபந்தகாரர் 2013 மே மாதத்தில் (விளம்பரம் வெளியிடுவதற்கு முன்னர்) அக்கறை வெளிப்பாடு சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது என வெளிப்பட்டதுடன் ஒப்பந்தகாரர் வேண்டப்பட்ட நிதி இயலுமைகளை பூர்த்திசெய்திருக்கவில்லை ஆகவே, இந்த வேலைக்காக தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர் ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதியை இழந்தார்.

(இ) கொள்வனவு வழிகாட்டலின் 5.3.16 ஆம் பிரிவின் பிரகாரம், கேள்வியாளர்கள் தெளிவான கேள்விகளை சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருக்குமாயின் கேள்வி கோரல் ஆவணங்களில் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டியிருந்தது. மேற்குறிப்பிட்ட ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மாற்றுக் கேள்வி தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டிருந்ததுடன் சபையால் வழங்கப்படடிருந்த கேள்வி கோரல் ஆவணங்களில் இது குறிப்பிடப்பட்டிருக்காத போதிலும் ரூபா 6,848.06 மில்லியனிற்கு வழங்குவதற்கு சிபார்சு செய்யப்பட்டிருந்தது.

## 4.4. முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

மீளாய்வாண்டின் போது மத்திய மாகாணத்தில் அமுலாக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவு நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் செயற்திட்டத்திற்காக ரூபா 162.75 மில்லியன் வழங்கப்பட்ட போதிலும், 2016 ஒக்தோபர் 30 அளவில் ரூபா 65.13 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 4.5. பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 1,542,951 பெறுமதியான காகிதாதி இருப்புக்கள் நீண்ட காலமாக மெதுவாக நகருபவையாக இருப்புக்களில் இருந்தன.

(ஆ) கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் பிரகாரம், 19 நீர் வழங்கல் திட்டங்கள் தொடர்பில் ரூபா 328,937,648 பெறுமதியான மெதுவாக நகரும் இருப்புக்கள் முறையான நடவடிக்கை எடுக்காமல் நீண்ட காலமாக இருந்தது என அவதானிக்கப்பட்டது.

(இ) ரூபா 614,524,704 பெறுமதியான அசையாத இருப்புக்கள் மற்றும் ரூபா 474,096,453 பெறுமதியான மெதுவாக நகரும் இருப்புக்கள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இருப்புக்களில் இருந்தது என அதவானிக்கப்பட்டதுடன் இது சபையின் மொத்த இருப்பின் பெறுமதியின் 9 சதவீதம் மற்றும் 7 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. மேலும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே 54 சதவீதம் மற்றும் 37 சதவீத அதிகரிப்பாக இருந்தது.

(ஈ) பிராந்திய முகாமையாளர் அலுவலகத்தில் மதில் சுவரின் நிர்மாணம் ரூபா 1,944,929 செலவழித்த பின்னர் செயற்திட்டத்தின் நோக்கங்களை அமையாமல் கைவிடப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது தேசிய வீடமைப்பு அதிகாரசபையால் ரூபா 109 மில்லியன் பெறுமதியான 1,686,348 cum3 தண்ணீர் நுகர்வற்காக பற்றுச்சீட்டு இடப்பட்டிருக்கவில்லை.

**4.6 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 21,034,473 ஆன இடைப்போக்கிலுள்ள இருப்புக்களில், ரூபா 4,223,879 பெறுமதியான இருப்புக்கள் ஒன்று முதல் மூன்று ஆண்டுகளிற்கு இடையிலான காலத்திற்காக புலனாய்வு செய்யப்படாமல் மாற்றமடையாதிருந்தது. மேலும், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் ரூபா 128,121,224 பெறுமதியான இருப்புக்களில், ரூபா 40,885,545 பெறுமதியான இருப்புக்கள் இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக இடைப்போக்கிலுள்ள இருப்புக்களாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) பெறப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட இருப்புக்கள் இருப்பு மெய்மையாய்வுக்கு முன்னர் இருப்பு மீதிக்கு சீராக்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 852,503,970 மொத்தமான தேறிய வரவு மீதிகள் மற்றும் ரூபா 377,300,265 மொத்தமாக தேறிய செலவு மீதிகள் இருப்புப் புத்தகங்கள் நாளதுவரையாக்கப்பட்டிருக்காமை காரணமாக இருப்பு மெய்மையாய்வின் பின்னர் இருப்பு மீதிகளிற்கு சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) குறித்த காலத்திற்குள் பதின்னான்கு ஒப்பந்த வேலைகள் பூர்த்தியாக்கபபட்டிருக்காததுடன் எவ்வித காரணங்களும் வழங்கப்படாமல் ஒன்று முதல் இரண்டு ஆண்டுகள் வரை தாமதப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உரிய தாமதக் கட்டணங்கள் ஒப்பந்த உடன்படிக்கையிலுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் ஒப்பந்தகாரர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2015 செப்தெம்பர் மாதத்திலிருந்து 2016 செப்தெம்பர் வரை நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சிற்கு 11 வாகனங்கள் விடுவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த பதினொரு வாகனங்களில், பிபீ-3978, கேசீ-2312, கேஏ-7558 மற்றும் கேஎல்-7787 இலக்கங்களை குறிக்கின்ற 04 வாகனங்கள் அமைச்சால் கையேற்கப்பட்டிருக்கவில்லை என அமைச்சு செயலாளர் எமக்கு தெரிவித்திருந்தார்

(உ) 2014 ஆம் ஆண்டின் போது காலிப் பகுதி கழிவுநீர் அகற்றல் செயற்திட்டத்தின் கீழ் கழிவு நீர் சுத்திகரிப்பு பொறி நிர்மாணிப்பதற்கு காணி கொள்வனவு செய்வதற்கு தீர்மானித்திருந்ததுடன் மதிப்பீட்டு திணைக்களம் இந்த காணி ரூபா 71.5 மில்லியனாக மதிப்பிட்டிருந்தது. பெறுமதியில் ரூபா 21.45 மில்லியன் அல்லது 30 சதவீதம் முற்பணக் கொடுப்பனவு 2014 ஏப்ரல் மாதத்தில் காணி உரிமையாளருக்கு செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அக் காணியில் சில குடும்பங்கள் ஏற்கனவே வசித்திருந்ததுடன் முற்பணம் செலுத்தப்பட முன்னர் இந்த காணியிலிருந்து மண் அகற்றப்பட்டிருந்தது. இது தொடர்பில் சபையால் உடனடி நடவடிக்கை எடுக்கபபட்டிருக்கவில்லை.

மேலும், 1974 இன் 2 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை சட்டத்தின் 92 ஆம் பிரிவின் பிரகாரம், காணி சுவீகரிப்பு அதிகாரச்சட்டத்தின் அசையாத ஆதனங்கள் சுவீகரிக்கப்பட்டு சபைக்கு மாற்றப்பட வேண்டும். அதற்கு மேல், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை விசேட தேவைக்கென அசையாக ஆதனத்தை கொள்வனவு செய்தது என சட்ட மா அதிபர் 2015 மார்ச் 11 இல் அபிப்பிராயம் வழங்கியிருந்தார். எவ்வாறாயினும், இது தொடர்பில் சபையானது 1974 இன் 2 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கியிருக்கவில்லை என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஊ) 3.000 மெற்றிக்தொன் அலுமினியம் சல்பற் கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தம் 2016 பெப்ரவரி 18 இல் ஐ.அ.டொலர் 420,000 மற்றும் ரூபா 7,500,000 இற்காக இந்தியன் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2016 மார்ச் 03 இல் மாதிரி உடன்படிக்கை கைசாத்திடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பொறியியலரளர் மதிப்பீட்டின் பிரகாரம், 3.000 மெற்றிக்தொன் அலுமினியம் சல்பற்றின் பெறுமி ரூபா 95,385,000 ஆக இருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தமானது ரூபா 68,517,600 இற்காக வழங்கப்பட்டிருந்ததுடன் இது பொறியியலாளர் மதிப்பீட்டினை விட குறைவாக 28.17 சதவீமாக இருந்தது. தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவானது சிபர்சு செய்வதற்கு முன்னர் கேள்வியாளரால் கோரப்பட்ட விலை வேறுபாட்டினை கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வில் வெளிப்பட்டது.

(ii) சபையின் இரண்டு உத்தியோகத்தர்கள் இந்தியாவில் வழங்குநரின் தொழிற்சாலையில் நடைபெற்ற முந்திய பொருலேற்றல் பரிசோதனையில் பங்குபற்றியிருந்ததுடன் அவர்களால் எடுக்கப்பட்ட மாதிரிகள் 2016 மே 30 இல் சபையின் ஆய்வு கூடத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பரிசோதனைக்காக பங்குபற்றியிருந்த உத்தியோகத்தர்கள் போதிய மாதிரியை சேகரிப்பதற்கு ஆற்றல் உள்ளனர் என நிரூபிப்பதற்கு சான்றுகள் இருக்கவில்லை.

(iii) 2016 யூன் 24 இல் முதலாவது பொருலேற்றலிலருந்து சேகரிக்கப்பட்ட மாதிகள் இரத்மலானை ஆய்வுகூடத்தில் பரிசோதிக்கப்பட்டிருந்தது. 2016 யூன் 30 இல் விங்கப்பட்ட பரிசோதித்தல் அறிக்கையின் பிரகாரம், மாதிரிகள் எஸ்எல்எஸ் 701- 1985 அலுமினியம் சல்பற்றிற்காக குறித்துரைக்கப்பட்ட குறிப்புரைகளுடன் உடன்பட்டிருந்தது. பரசோதித்தல் அறிக்கையின் அடிப்படையில் பிரதி பொது முகாமையாளர் (வழங்கல் மற்றும் பொருள் முகாமைத்துவம்) தண்ணீர் சுத்திகரிப்பு நோக்கத்திற்காக இந்த அலுமினியம் சல்பற்றின் பயன்பாட்டிற்கு பிரதான களஞ்சியம் மற்றும் மாகாண தண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அறிவித்திருந்தார். எவ்வாறாயினும், 2016 யூன் 23 இல் கந்தான தண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து செகரிக்கப்பட்ட மாதிரிகள் தொடர்பில் 2016 யூலை 11 ஆந் திகதிய பரிசோதனை அறிக்கையின் பிரகாரம், அலுமினியம் சல்பற்றிற்கான குறிப்புரைகளுக்கு அமைவாக இருக்கவில்லை.. மேலும், முதலாவது பொருலேற்றலிருந்து சேகரிக்கபட்ட இரண்டு மாதிகள் மற்றும் கந்தான தண்ணீர் சுத்திகரிப்பு நிலையம் என்பன 2016 யூலை 25 இல் அம்பத்தளை யேவுகூடத்தில் பரீட்சிக்கப்பட்டதுடன் மாதிரிகள் குறிப்புரைகளின் வரிசையில் இருக்கவில்லை என உறுதிப்படுத்தப்பட்டது.

(iv) 2016 ஒக்தோபர் 07 இல் வழங்குநருடன் செய்யப்பட்ட கலந்துரையாடலின் பிரகாரம், வழங்குநர் 274.1 மெற்றிக்தொன் அலுமனியம் சல்பற்று மாவாக்குவதற்கு உடன்பட்டு சபைக்கு வழங்கப்பட்டது. எவ்வாறாயினும், வழங்குநர் உடன்பட்டவாறு பொருட்களை வழங்குவதற்கு தவறியிருந்தார்.

ஒப்பந்தகாரர் பிரதான களஞ்சியத்தில் அலுமினியம் சல்பற்றை மாவாக்குவாக்குவதற்காக அரைக்கும் இயந்திரத்தை பயன்படுததியிருந்தார் என கணக்காய்வில் வெளிப்பட்டது.

(v) சபையானது 2016 திசெம்பர் 16 வரை வழங்குநருக்கு ரூபா 14,006,437 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் வழங்குநரால் வழங்கப்பட்ட செயலாற்றல் உத்தரவாதத்தலிருந்து ரூபா 6,861,000 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. ஆகவே, ரூபா 7,205,437 ஆன நிதி நட்டங்கள் இந்த கொடுக்கல் வாங்கல் காரணமாக விளைந்திருந்தது.

(vi) அலுமினியம் சல்பற்றின் தரம் குறைவு காரணமாக, சபைக்கு மேலதிக கிரயம் ஏற்படுவதனால் முன்னைய வழங்குநரிடமிருந்து அலுமினியம் சல்பற் கொள்வனவு செய்திருந்தது.

(எ) காலி பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டம் 2012 இல் ஹபுகல தண்ணீர் சுத்திகரிப்புச் சாலை நிர்மாணிப்பதற்காக ரூபா 16 மில்லியன் செலுத்தி காணியொன்றை கொள்வனவு செய்திருந்ததுடன் காணி சுவீகரித்த பின்னர் பாரிய வெடிப்பு கண்டுபிடிக்கப்பட்டமை காரணமாக அக்காலத்திற்கு குறித்த நோக்கத்திற்காக காணி பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை அதேநேரம் அவற்றின் நிர்மாணத்திற்கான புலனாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4.7 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையானது மீளாய்வாண்டின் போது முகாமையாளர்கள் / பொறியியலாளர் (எந்திரவியல்), பொறியியலாளர் (மின்னியல்), பொறியியலாளர் (சிவில்), நடுத்தர மட்ட தொழில்நுட்ட (எம்எல்-ரீ) எழுதுனர் மற்றும் இணைந்த வகுதியினர், வேறு தொழில்திறன் தரம் மற்றும் அரைத் தொழில்திறன் போன்ற பிரதான செயற்பாட்டு மட்ட பதவிகளில் இருந்த 729 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ வேசவைகள் திணைக்கள சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டத்தை இறுதியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையானது மத்திய, கண்டி கிழக்கு, கண்டி தெற்கு மற்றும் கண்டி வடக்கு பிராந்திய ஆதார நிலையங்களில் நிலவிய 224 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் இது அனுமதிக்கப்பட்ட பதவியணியின் 30 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

(ஈ) கணக்காய்விற்கு சபையால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், சபையானது 2007 ஒக்தோபரிலிருந்து 2016 திசெம்பர் 31 வரையான காலத்தின் போது அங்கு பிரதான செயற்பாட்டு மட்ட பதவிகளில் 729 வெற்றிடங்கள் இருந்த போதிலும் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களிற்கு பல்வேறு வகுதிகளில் 113 ஊழியர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர். சபையால் செலுத்தப்பட்ட சம்பளங்கள் மற்றும் படிகள் அந்த செயற்திட்டங்களால் சபைக்கு மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. 02 பிரதி பொது முகாமையாளர்கள், 13 உதவிப் பொது முகாமையாளர்கள், 33 பிரதம பொறியியலாளர்கள், 25 பொறியியளாளர்கள், 24 பொறியியல் உதவியாளர்கள் மற்றும் 8 சமூகவியலாளர்கள் போன்றோர் அவர்களில் உள்ளனர்.

## 4.8 வெளிப்படையான முறையீனங்கள்

1999 தொடக்கம் 2006 வரையான காலத்தின் போது திருகோணமலை, களனி மற்றும் அம்பாறை பிராந்தியங்களில் இடம்பெற்ற ரூபா 246.66 மில்லியன் காசு மோசடிகளை 2016 திசெம்பர் 31 வரையிலும் பொறுப்புடைய நபர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிதன்மையும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதிகளைப் பயன்படுத்தி பெருமளவு எண்ணிக்கையான நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் செயற்திட்டங்கள் சபையால் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் சபையின் தொழில்நுட்ப கணக்காய்வு பிரிவுக்கு போதிய பதவியணியினர் இணைக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்டவற்றிற்கும் சபையின் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்திற்கும் இடையில் 2 சதவீதம் முதல் 75 சதவீதம் வரையிலான வீச்சிலான குறிப்படத்தக்களவு வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடானது சிறந்த முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவிகளாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் குறிக்கின்றது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள நலிவுகள் காலத்திற்கு காலம் சபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| கட்டுப்பாட்டு பரப்பு | அவதானிப்பு |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) கட்டுப்பாட்டு கணக்குகள் மற்றும் நடைபெறும் வேலை மீதிகளை இணக்கம் செய்வதற்கு தவறியிருந்தது. |
| | (ii) பேரேட்டில் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் மற்றும் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்களை இலக்கமிடலில் முரண்படல் |
| | (iii) சில நட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் நெருக்கமாக பதியப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம் | (i) வேறுபட்ட பிராந்தியங்களிலுள்ள ஒரே வகை நிலையான சொத்துக்களின் இரட்டிப்பு |
| | (ii) கற்பனைச் சொத்துக்களின் பெறுமதியை மீளாய்வு செய்து மீளவெளிப்படுத்தாமை |
| | (iii) செயற்திட்டங்கள் முடிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்படாமை |
| | (iv) நீண்ட காலமாக மாற்றமடையாதிருந்த நடைபெறும் வேலை மீதிகள் பற்றி புலனாய்வு செய்வதற்கு தவறியமை |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இருப்புக் கட்டுப்பாடு | (i) | பேரேட்டு மீதிகளுடன் சேர்த்து பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்ட மீதிகளை இணக்கம் செய்யாமை |
| | | (ii) | இடைப்போக்கிலுள்ள மீதிகளில் நீண்ட நிலுவையாகவிருக்கின்ற இருப்புக்கள் நிலவியமை |
| | | (iii) | களஞ்சியங்களில் நீண்டகாலம் நகர்வற்ற மற்றும் மெதுவாக நகரும் இருப்பு விடயங்கள் உள்ளன. |
| (ஈ) | செயற்திட்ட நிர்வாகம் மற்றும் செயலாற்றல் மீளாய்வு | (i) | எதிர்பார்க்கப்பட்ட காலத்தில் செயற்திட்டங்களை பூர்த்தியாக்க தவறியமை மற்றும் தகுந்த காரணங்கள் இல்லாமல் அதிகமான செயற்திட்டங்களின் காலப்பகுதி நீடிக்கப்படுதல் |
| | | (ii) | சாத்திய வள ஆய்வை சரியாக மேற்கொள்வதற்கு முடியாதிருந்தமை |
| | | (iii) | அரசாங்க கொள்வனவு வழிகாட்டலுடன் இணங்காமை |
| | | (iv) | கால நீடிப்பு மற்றும் நிதிப் பயன்பாடுகளிலுள்ள நலிவுகள் காரணமாக கிரயம் உயர்வாக இருந்தமை. |
| (உ) | மீள்சுழற்சி திட்டங்களின் கணக்கீடு | | மீள்சுழற்சி திட்டங்களிற்காக பெறப்பட்ட முற்பணம் ஏற்பட்ட சம்பந்தப்பட்ட செலவினங்களை தீர்ப்பனவு செய்யாமல் நீண்ட காலமாக பொறுப்பில் இருந்தது. |
| (ஊ) | ஆளணி முகாமைத்துவம் | (i) | வேண்டப்பட்ட அதிகாரம் இல்லாமல் வேறு நிறுவனங்களிற்கு மனித வளங்களை விடுவித்தல் |
| | | (ii) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை விஞ்சியும் பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமலும் ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்திருந்தமை |